RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 303 | நவம்பர்.3 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## தீவிர வறுமை இல்லாத மாநிலம் கேரளா: முதல்வர் பினராயி விஜயன் அறிவிப்பு

திருவனந்தபுரம், நவ.03-

தீவிர வறுமை இல்லாத மாநிலமாக கேரளா மாறியிருப்பதாக முதல்வர் பினராயி விஜயன் அறிவித்துள்ளார்.

கேரளாவில் வறுமை ஒழிப்பு திட்டம் கடந்த 2021ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதுதொடர்பாக மாநிலம் முழுவதும் ஆய்வு நடத்தப்பட்டது. இதில் 64,006 குடும்பங்கள் தீவிர வறுமையில் வாடுவது தெரியவந்தது. இது மாநில மக்கள் தொகையில் 0.2 சதவீதம் ஆகும். அவர்களை வறுமையில் இருந்து மீட்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



பல்வேறு குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. நிலமற்ற குடும்பங்களுக்கு நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. சுயதொழில் தொடங்க நிதியுதவி வழங்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோருக்கு திறன்சார் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதன்காரணமாக 64,006 குடும்பங்களும் தீவிர வறுமையில் இருந்து மீண்டன.

கேரளா உதயமான தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி நடைபெற்ற சிறப்பு சட்டப்பேரவைக் கூட்டத்தில், தீவிர வறுமை இல்லாத மாநிலமாக கேரளா மாறியிருப்பதாக முதல்வர் பினராயி விஜயன் அறிவித்தார்.

இதை பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆளும் மார்க்சிஸ்ட் கூட்டணி அரசு மக்களை ஏமாற்றுவதாக எதிர்க்கட்சி தலைவர் சதீசன் குற்றம் சாட்டினார். முதல்வரின் அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ், கூட்டணி கட்சி எம்எல்ஏக்கள் வெளிநடப்பு செய்தனர்.


கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் நேற்று மாலை கேரள உதய தின விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவிலும், தீவிர வறுமை இல்லாத மாநிலமாக கேரளா உருவெடுத்திருப்பதாக முதல்வர் பினராயி அறிவித்தார்.

அப்போது அவர் பேசும்போது, "கேரளா வரலாற்றில் புதிய அத்தியாயம் தொடங்கி உள்ளது. தீவிர வறுமை இல்லாத மாநிலமாக மாறியிருப்பதால் ஒவ்வொரு மலையாளியின் தலையும் நிமிர்ந்திருக்கிறது. ஏழை குடும்பங்களின் முன்னேற்றத்துக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த வறுமை ஒழிப்பு திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படும்" என்று தெரிவித்தார்.

## வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது இஸ்ரோவின் 'பாகுபலி' சிஎம்எஸ்03 செயற்கைக்கோள்!

சென்னை: நவ.3-

எல்விஎம்3 ராக்கெட் மூலம் கடற்படை பயன்பாட்டுக்கான சிஎம்எஸ்03 செயற்கைக்கோள் திட்டமிட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது. இதன்மூலம் தனது வரலாற்றில், புவிவட்ட சுற்றுப்பாதைக்கு அதிகபட்ச எடை கொண்ட செயற்கைக்கோளை செலுத்தி இஸ்ரோ சாதனை படைத்துள்ளது.



நம்நாட்டுக்கு முக்கிய தேவையான தொலைத்தொடர்பு, தொலையுணர்வு, வழிகாட்டுதல் செயற்கைக்கோள்களை பிஎஸ்எல்வி, ஜிஎஸ்எல்வி, எல்விஎம்3 ராக்கெட்டுகள் வாயிலாக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) விண்ணில் நிலைநிறுத்தி வருகிறது.

இதில் ராக்கெட் வாயிலாக புவிவட்ட சுற்றுப் பாதைக்கு 4,000 கிலோ வரையும், குறைந்த தாழ் வட்ட சுற்றுப்பாதைக்கு 8,000 கிலோ வரையும் எடை கொண்ட செயற்கைக்கோள்களை மட்டுமே விண்ணில் செலுத்த முடியும். இதனால் அதிக எடை கொண்ட செயற்கைக்கோள்களை பிற நாடுகளின் உதவி கொண்டு விண்ணில் செலுத்த வேண்டிய நிலை இருந்தது. அதனால் நமக்கு செலவீனம் அதிகரிப்பதுடன், கால விரயமும் ஏற்பட்டது.

இதையடுத்து அனைத்து ராக்கெட்களின் உந்துவிசைகளை அதிகரிக்கும் பணிகளை இஸ்ரோ முன்னெடுத்தது. அதன்பலனாக இஸ்ரோவின் பாகுபலி என்றழைக்கப்படும் எல்விஎம்3 ராக்கெட்டின் எஸ் 200 மோட்டார்கள், விகாஸ் இயந்திரம், கிரையோஜெனிக் இயந்திரம் ஆகியவற்றின் திறன்கள் மேம்படுத்தப்பட்டு அதன் உந்துவிசை வழக்கத்தைவிட 14 விநாடிகள் வரை அதிகரிக்கப்பட்டது. இதையடுத்து எல்விஎம்3 ராக்கெட் மூலமாக 4,410 கிலோ எடை கொண்ட சிஎம்எஸ்03 செயற்கைக்கோளை விண்ணில் புவிவட்டப் பாதைக்கு செலுத்த இஸ்ரோ முடிவு செய்தது.

இந்த ராக்கெட் ஏவுதலுக்கான 24 மணி நேர கவுன்ட்டவுன் நேற்று தொடங்கியது. தொடர்ந்து ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் மையத்தின் 2வது ஏவுதளத்தில் இருந்து எல்விஎம்3 ராக்கெட் இன்று மாலை 5.26 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது. ராக்கெட் தரையில் இருந்து புறப்பட்ட 16 நிமிடத்தில் செயற்கைக்கோளை 169 கி.மீ உயரத்தில் திட்டமிட்ட புவிவட்ட பரிமாற்ற சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தியது. இதன் சுற்றுப்பாதை படிபடியாக மாற்றப்பட்டு குறைந்தபட்சம் 170 கி.மீ. தூரமும், அதிகபட்சம் 29,970 கி.மீ. தொலைவும் கொண்ட புவிவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட உள்ளது.

இதற்கிடையே கடற்படை பயன்பாட்டுக்காக 2013ல் செலுத்தப்பட்ட ஜிசாட்7 (ருக்மணி) செயற்கைக்கோளின் ஆயுட்காலம் முடிந்துவிட்டது. அதற்குமாற்றாக சுமார் ரூ.1,600 கோடியில் வடிவமைக்கப்பட்ட சிஎம்எஸ்03 (ஜிசாட்7ஆர்) செயற்கைக்கோள் தற்போது ஏவப்பட்டுள்ளது. இதன் ஆயுட்காலம் 15 ஆண்டுகள். இதில் விரிவுபடுத்தப்பட்ட யுஎச்எப், சி, க்யூ, எஸ் போன்ற மல்டி பேண்ட் அலைக்கற்றைகள் உட்பட அதிநவீன தொழில்நுட்பங்கள் இடம் பெற்றுள்ளன.

இது முழுவதும் இந்திய கடற்படை மற்றும் ராணுவத்தின் பணிகளுக்காக பயன்படுத்தப்படும்.

கடல்வழி ஊடுருவலை துல்லியமாக கண்காணிக்க முடியும்: இந்திய நிலப்பரப்பு மற்றும் சுமார் 20 கி.மீட்ட பரப்பளவு கொண்ட கடலோரப் பகுதிகளை கண்காணிக்க உதவும். அனைத்துவிதமான போர் விமானங்கள், போர்க் கப்பல்கள், நீரமுழ்கி கப்பல்கள் மற்றும் தரை கட்டுப்பாடு மையங்கள் இடையேயான ஒருங்கிணைந்த தகவல் தொடர்பு சேவையை மேம்படுத்தி மிகவும் பாதுகாப்பானதாக வழங்கும். போர்க்காலங்களில் இந்த செயற்கைக்கோளில் இருந்து கடற்படையினர் நேரிடியாகவே தகவல்களை பெறலாம். இதனால் காலவிரயம் தவிர்க்கப்படும். எதிரி நாடுகளின் கடல்வழி ஊடுருவலை துல்லியமாக கண்காணிக்க முடியும்.

இதுதவிர கடற்படை பயனுக்காக மேலும் 1 செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றி மூலம் இஸ்ரோவின் ராக்கெட் ஏவுதல் திறன்கள் மேம்படுத்தப்பட்டுள்ளது. இவை அடுத்த செயல்படுத்தப்பட உள்ள மனிதர்களை விண்ணுக்கும் அனுப்பும் ககன்யான், சந்திரயான்4 திட்டங்களுக்கும் உந்துதலாக இருக்கும். மேலும், உள்நாட்டிலேயே அனைத்து தொழில்நுட்ப வசதிகளையும் பெற்று விண்வெளித் துறையில் தற்சார்பு நிலையை நம்நாடு விரைவில் எட்டுவோம் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

முக்கிய அம்சங்கள்: சிஎம்எஸ்03 இஸ்ரோவால் புவிவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்ட அதிகபட்ச எடை கொண்ட செயற்கைக்கோளாகும்.

இதற்கு முன்பு 2018ல் செலுத்தப்பட்ட 3,423 கிலோ எடை உடைய ஜிசாட் 29 செயற்கைக்கோள் அந்தப்பட்டியலில் முன்னிலையில் இருந்தது. எனினும், இஸ்ரோ இதுவரை வடிவமைத்ததில் அதிக எடை கொண்டது ஜிசாட் 11(5,854 கிலோ) செயற்கைக்கோளாகும். இது ஐரோப்பிய கூட்டமைப்பின் விண்வெளி ஆய்வு மையத்தின் ஏரியன்5 ராக்கெட் மூலமாக 2018ல் செலுத்தப்பட்டது

இஸ்ரோவின் பாகுபலியான சிஎம்எஸ்03 எல்விஎம்3 ராக்கெட் வகையில் 8வது ஏவுதலாகும். இந்த 8 ஏவுதல்களும் வெற்றி பெற்றுள்ளன. மேலும், சிஎம்எஸ்03 உடன் 49 செயற்கைக்கோள்கள் இஸ்ரோவால் இதுவரை விண்ணில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

## செங்கோட்டையன் வீட்டில் குவிந்த சட்ட நிபுணர்கள்.. திடீர் ஆலோசனை! எடப்பாடிக்கு எதிரான ஆக்ஷனுக்கு ரெடி

சென்னை, நவ.03-

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து வழக்கு தொடர்வது குறித்து சட்ட நிபுணர்களுடன் அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தீவிர ஆலோசனை நடத்தியதாக தகவல் வெளியாகி உள்ளது. கோபிசெட்டிபாளையத்தில் உள்ள தமது வீட்டி, சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார் செங்கோட்டையன்.



அதிமுகவில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் ஒன்றிணைக்க வேண்டும் எனப் போர்க்கொடி தூக்கிய முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனின் பதவிகளை அக்கட்சி பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பறித்தார். மேலும், செங்கோட்டையன் ஆதர வாளர்கள் கட்சியை விட்டு நீக்கப்பட்டனர்.

இந்நிலையில், அதிமுக கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான கே.ஏ.செங்கோட்டையனை அதிரடியாக நீக்கினார் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி. ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி விழாவில் ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி. தினகரன் ஆகியோருடன் இணைந்து பங்கேற்றதையடுத்து செங்கோட்டையனை கட்சியில் இருந்து நீக்கி அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி வெள்ளிக்கிழமை அறிவித்தார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய கே.ஏ.செங்கோட்டையன், "1972ல் எம்ஜிஆர் கட்சி ஆரம்பித்ததில் இருந்து கட்சியில் நிர்வாகியாக இருந்துள்ளேன். ஆனால் எடப்பாடி பழனிசாமி 1989 இல்தான் கட்சிக்கு வந்தார். கட்சிக்காக 53 ஆண்டுகள் பல்வேறு வகைகளில் பாடுபட்டவன் நான்.

தேவர் ஜெயந்தி விழாவுக்காக பசும்பொன்னுக்கு கடந்த 30ஆம் தேதி சென்றிருந்தேன். கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்கள் அனைவரும் ஒருங்கிணைய வேண்டும் என்பதற்காகத்தான் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம், டி.டி.வி.தினகரனை சந்தித்தேன்.

ஆனால் என்னிடம் விளக்கம் கேட்காமலே கட்சியில் இருந்து நீக்கியது என க்கு மிகுந்த மனவேதனையை அளிக்கிறது. தொடர்ந்து கட்சியில் இயங்க வேண்டும் என்பதுதான் எனது நோக்கம். எடப்பாடி பழனிசாமி என்னை அதிமுகவில் இருந்து நீக்கியது கட்சி விதிகளின்படி செல்லாது. அதற்கு எதிராக வழக்குரைஞர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு வழக்குத் தொடுப்பேன்." எனத் தெரிவித்திருந்தார். இந்நிலையில், ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிப் பாளையத்தில் உள்ள தனது வீட்டில், செங்கோட்டையன் சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை மேற்கொண்டுள்ளார். அப்போது, கட்சி விதிகள் தொடர்பாக தீவிரமாக ஆலோசனை நடத்தியதாகத் தெரிகிறது. வரும் 5 ஆம் தேதிக்கு பிறகு தங்கள் ஆதரவாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களுடன் ஓபிஎஸ், டிடிவி தினகரன், சசிகலாவுடன் இணைந்து ஆலோசனை நடத்துவது குறித்து விவாதிக் கப்பட்டதாக கூறப்படுகிறது.

கோடநாடு கொள்ளை, கொலை வழக்கை தீவிரப்படுத்துவது தொடர்பாகவும் செங்கோட்டையன் ஆலோசனை நடத்தி யதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நவம்பர் 5 ஆம் தேதிக்கு பிறகு மீண்டும் செய்தியாளர்களை செங்கோட்டையன் சந்திக்க உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. அப்போது தனது அடுத்தகட்ட நகர்வு குறித்து விரிவாகப் பேசுவார் எனக் கூறப்படுகிறது.

## துரோகம் செய்தது யார்?.. எடப்பாடி பழனிசாமிக்கு குறும்படம் போட்ட டி.டி.வி தினகரன்

திருச்சி, நவ.03-

தமிழ்நாடு அரசியல் கட்சிகள் 2026 சட்டமன்ற தேர்தலுக்கு தயாராகி வருகிறார்கள். அதிமுகவில் உள்கட்சி பூசல், கூட்டணியில் குழப்பம் போன்ற பஞ்சாயத்துகள் அதிகரித்து வருகிறது. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில் எடப்பாடி பழனிசாமி செங்கோட்டையன், டி.டி.வி தினகரன் உள்ளிட்டோர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் வைத்துள்ளார். இதற்கு பதிலளித்துள்ள தினகரன் எடப்பாடி பழனிசாமி பாணியில் பழைய வீடியோ குறும்படம் போட்டு காண்பித்துள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களைச் சந்தித்த அமமுக பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன், "ஆர்கேநகர் இடைத்தேர்தலில் நான் முதல்முறையாக தொப்பி சின்னத்தில் நின்றபோது பழனிசாமி எனக்காக ஓட்டு கேட்டார். பொதுவாக ஓட்டு கேட்கும்போது இவர் நல்லவர், வல்லவர், அம்மாவின் தொகுதியில் போட்டியிடுகிறார். அம்மா விட்டு சென்ற பணிகளை நிறைவேற்ற இவருக்கு வாக்களியுங்கள் என்று தானே கேட்பார்.

எடப்பாடிக்கு குறும்படம்

அதையெல்லாம் தாண்டி அப்போது அவர் கூறினார். அவர் ஸ்டைலில் அந்த வீடியோவை காண்பிக்கிறேன்." என்று டேபில் ஒரு வீடியோ போட்டு காண்பித்தார். அதில் எடப்பாடி பழனிசாமி பேசும்போது, "இதயதெய்வம் அம்மா சட்டமன்றத்தில் பேசும்போது எனக்கு பின்னால் அதிமுக 100 ஆண்டுகள் ஆட்சி தொடரும் என்று குறிப்பிட்டார். அந்த செய்தியை நினைவாக்கும் நேரம் இது. அம்மாவின் வாக்கு வேத வாக்கு. அந்த வேத வாக்கை நாம் அத்தனை பேரும் ஒருமித்த கருத்தோடு, அண்ணன் டிடிவி தினகரனை வெற்றி பெற வைத்து அம்மாவுக்கு நன்றி செலுத்த வேண்டும்." என்றார். மீண்டும் தொடர்ந்த தினகரன், "இதற்கு என்ன அர்த்தம் என்று நீங்கள் சொல்லுங்கள். டிடிவி தினகரன் என்று கூட அவருக்கு சொல்ல தெரியவில்லை. அதாவது அண்ணன், சந்திரன், இந்திரன் என்றெல்லாம் சொல்வார்கள். அதைக் கூட இவர் தவறாக சொல்கிறார்.



துரோகம் செய்தது யார்

அம்மா சட்டமன்றத்தில், இன்னும் எத்தனை நூற்றாண்டுகளானாலும் இந்த இயக்கம் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும். என்றார். அதை சரியாக புரிந்து கொள்ளாமல், இடைத்தேர்தலின்போது வேட்பாளராக்கு வாக்களித்து வெற்றி பெறவைத்து நடத்துங்கள் என்கிறார். ஏற்கனவே 122 சட்டமன்ற உறுப்பினர்கள் அவருடன் தான் இருக்கிறார்களே. நான் ஜெயிப்பதற்கும், அதற்கும் என்ன சம்பந்தம்.


அம்மா சொன்னதை நிறைவேற்ற அண்ணன் டி.டி.வி தினகரன் வந்திருக்கிறார் என்பது தானே அதன் அர்த்தம். 2017 மார்ச் மாதம் அப்படியெல்லாம் என்னை பேசியவர், ஏப்ரல் மாதம் 4 ஆம் தேதி இவர்கள் ஊர் ஊராக பணம் கொடுத்து ரெய்டில் மாட்டிக் கொண்டார்கள். அதன் பிறகு அந்த தேர்தலையே நிறுத்திவிட்டார்கள். ஏப்ரல் 14 அம்பேத்கர் பிறந்த நாள், தமிழ் வருட பிறப்பு தினம். பகீர் குற்றச்சாட்டு அன்றைக்கு பழனிசாமி மற்றும் மூத்த அமைச்சர்கள் என்னுடன் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்க வந்தனர். அங்கிருந்து 3 நாட்களில் என்னை கட்சியில் இருந்து நீக்குமளவுக்கு நான் என்ன துரோகம் செய்தேன். என்னை நீக்கியதற்காக கோபப்பட்ட எம்.எல்.ஏக்கள் 18 பேர், எதற்காக துணைப் பொதுச்செயலாளரை நீக்கியுள்ளீர்கள் என்று அவரிடம் கேட்டுள்ளனர்.

அதற்கு என்னை நீக்கவில்லை என்றால் இரட்டை இலை சின்னம் கிடைக்காது. ஆட்சி அதிகாரம் இருக்காது. என்று மேலிடத்தில் இருந்து அழுத்தம் கொடுத்ததால் நீக்கிவிட்டோம் என பழனிசாமி கூறியுள்ளார். அந்த 18 பேரை நான் பிடித்து வைத்துக் கொண்டதாக கூறுகிறீர்களே. அன்றைக்கு ஆட்சி அதிகாரம் உங்களிடம் தான் இருந்தது. அந்த 18 பேரும் சட்டமன்றத்தில் உங்களுக்காக தான் வாக்களித்துள்ளனர்.

அவர்களே தான் எங்களுக்கு பழனிசாமி மீது நம்பிக்கையில்லை. வேறு முதல்வரை தேர்ந்தெடுப்பதற்கு சட்டமன்றத்தை கூட்டுங்கள் என்று ஆளுநரிடம் மனு அளித்துள்ளனர். துரோகம் செய்த பழனிசாமி, சினிமாவில் பெரும் புகழும், வருமானமும் உள்ள விஜய் இவரை தோளில் தூக்கி வைத்து அவருக்காக ஓட்டு கேட்பாரா. அப்படியே கேட்டாலும் தேர்தல் முடிந்த பிறகு அவரை பழனிசாமி காலி செய்வாரா மாட்டாரா." என்றார்

## இளையான்குடி மறவமங்கலம் பகுதிகளில் நாளை மின்தடை

சிவகங்கை, நவ.3-



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி மறவமங்கலம் துணை மின் நிலையங்களில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் நாளை (நவ04) காலை 10 மணியிலிருந்து மாலை 5மணி வரை இளையான்குடி, கீழாயூர், தாயமங்கலம், சோதுகுடி, கண்ணமங்கலம், புதூர், நகரகுடி, கருஞ்சுத்தி..

மறவமங்கலம் ஆண்டூரணி, காயாஓடை, சிலுக்கப்பட்டி, புலிக்கண்மாய், காஞ்சிப்பட்டி, வலையம்பட்டி, தச்சன்கண்மாய், செவல்கண்மாய், எம்.வாகைக்குளம், டி.வி.கண்மாய், புலியூரணி, மாராத்துார். பகுதிகளில் மின்தடை இருக்கும் என மின் செயற்பொறியாளர்கள் அறிவித்துள்ளனர்.

# வாக்காளர்களை நீக்கும் நோக்கத்தோடு எஸ்ஐஆர் மேற்கொள்ளப்படுகிறது: ஜோதிமணி எம்.பி.

கரூர், நவ.03-

"வாக்காளர்களை நீக்கும் நோக்கத்தோடு எஸ்ஐஆர் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் தான் எஸ்ஐஆர்ஐ கடுமையாக எதிர்த்து அனைத்துக் கட்சி கூட்டம் கூட்டப்பட்டது." என எம்.பி. ஜோதிமணி தெரிவித்துள்ளார்.



கரூரில் உள்ள எம்.பி. அலுவலகத்தில் இன்று (நவ.2ம் தேதி) கரூர் எம்.பி. செ.ஜோதிமணி செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழ்நாடு, இரண்டு யூனியன் பிரதேசங்கள் உட்பட 12 மாநிலங்களில் எஸ்ஐஆர் (வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம்) திணிக்கப்படுகிறது. இதனை இண்டியா கூட்டணி எதிர்க்கிறது.

எஸ்ஐஆர் குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அந்த பயிற்சியின் போது, ஒரு படிவம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது ஏற்கனவே உள்ள வாக்காளர் பட்டியலை அப்டேட் செய்யும் பணிகளை மேற்கொள்வார்கள்.

இறந்தவர்கள் பெயர்களை நீக்குவார்கள். ஆனால் புதிய நடைமுறை குறித்து புரிந்து கொள்ள முடியவில்லை. பிஹாரில் எஸ்ஐஆர் மூலம் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். இதுகுறித்து வழக்கு தொடரப்பட்டுள்ளது.

புதிய படிவத்தில், 2002ம் ஆண்டு முந்தைய சிறப்பு தீவிர திருத்தத்தில் உள்ள வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர் படிவத்தில் வாக்காளரின் பெயர், வாக்காளர் அடையாள அட்டை எண், பாகம் எண், பாகம் பெயர், சட்டப்பேரவை, மக்களவைத் தொகுதி, தற்போதைய புகைப்படம் ஆகியவை கேட்கப்பட்டுள்ளது.

பிறந்த தேதி, ஆதார் எண் (விருப்பத்தேர்வு), போன், தந்தை/பாதுகாவலரின் பெயர், அவர்களின் புகைப்பட அடையாள அட்டை எண், தாயாரின் பெயர், அவர்களின் வாக்காளர் அடையாள அட்டை எண் (இருப்பின்), துணைவரின் பெயர், வாக்காளர் அடையாள அட்டை எண் (இருப்பின்) ஆகிய விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

மேலும் 2002ம் ஆண்டு சிறப்பு தீவிர திருத்தப் பட்டியலில் உள்ள வாக்காளர் பெயர், அடையாள அட்டை எண், உறவினரின் பெயர், உறவு முறை பாகம் எண், வரிசை எண் ஆகிய விவரங்கள் மேலும் உறவினரின் மேற்கண்ட விவரங்களும் கேட்கப்பட்டுள்ளன.

2002ம் ஆண்டில் இருந்த உறவினர்கள் தற்போது இல்லை என்றால் அவர்கள் இறப்புச் சான்றிதழை சமர்பிக்கும் நிலை உள்ளது. சொத்து இருப்பவர்கள் இறப்புச் சான்றிதழ் பெறுவார்கள். எல்லோரும் இறப்புச் சான்றிதழ் பெறுவதில்லை. இதனால் இறப்புச் சான்றிதழ் இணைக்காவிட்டாலோ, இப்படிவத்தை நகலெடுக்க முடியாததால் தவறாகவோ, முழுமையாக பூர்த்தி செய்யாவிட்டாலோ நிராகரிக்க வாய்ப்புள்ளது.

2002ம் ஆண்டுக்கு பிறகு வாக்காளித்தவர்களின் குடியுரிமையை தேர்தல் ஆணையம் தனது அதிகாரித்தை மீறி சரிபார்க்கும் பணியை மேற்கொள்கிறது. இதனை உள்துறை அமைச்சகம் தான் செய்யவேண்டும். வாக்காளர்களை நீக்கும் நோக்கத்தோடு எஸ்ஐஆர் மேற்கொள்ளப்படுகிறது. வாக்காளர்களை பட்டியலில் இருந்து நீக்கும் முயற்சி தான் எஸ்ஐஆர். இதனால் தான் எஸ்ஐஆர்ஐ கடுமையாக எதிர்த்து அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது.

தேர்தல் ஆணையம் பாஜகவின் கைப்பாவையாக செயல்படுகிறது. நம் நம்பத்தன்மையை சிதைக்கும் பணியை தேர்தல் ஆணையம் மேற்கொள்கிறது. வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவர திருத்தம் என்ற பெயரில் தமிழநாட்டு மக்கள் உட்பட 12 மாநிலங்களில் உள்ள வாக்காளர்களை நீக்க முயற் சிக்கும் இந்தச் செயலை இண்டியா கூட்டணி கடுமையாக எதிர்க் கிறது என்றார்.

# அமெரிக்க நிதி நிறுவனத்திடம் 500 மில்லியன் டாலர் கடன் பெற்று இந்திய வம்சாவளி சிஇஓ மோசடி

வாஷிங்டன், நவ.03-

அமெரிக்க நிதி நிறுவனத்திடம் இருந்து 500 மில்லியன் டாலர் கடன் பெற்று இந்திய வம்சாவளி சிஇஓ மோசடி செய்துள்ளார்.



அமெரிக்காவில் உள்ள நிதி நிறுவனம் பிளாக் ராக். இந்நிறுவனத்தின் துணை நிறுவனமான எச்பிஎஸ் நிறுவனத்திடம், பிராட்பேண்ட் டெலிகாம் மற்றும் பிரிட்ஜ் வாய்ஸ் என்ற தொலைத் தொடர்பு நிறுவனங்களை நடத்தி வரும் இந்திய வம்சாவளி சிஇஓ பாங்கிம் பிரம்பட் என்பவர் கடந்த 2020ம் ஆண்டு முதல் 2024ம் ஆண்டு வரை 500 மில்லியன் டாலருக்கு மேல் கடன் பெற்றுள்ளார்.

கடனாக பெற்ற பணத்தை எல்லாம் இவர் இந்தியா மற்றும் மொரிசீயஸ் நாட்டுக்கு மாற்றியுள்ளார். சில இமெயில் முகவரிகளில் மாற்றங்கள் இருந்ததை கண்டுபிடித்த எச்பிஎஸ் நிறுவன ஊழியர் ஒருவர், பிராட்பேண்ட் டெலிகாம் மற்றும் பிரிட்ஜ் வாய்ஸ் நிறுவனம் முறைகேடுகள் செய்வதை கண்டறிந்தார். இது குறித்து எச்பிஎஸ் நிறுவன அதிகாரிகள் பிரம்பட்டிடம் கேட்டபோது, அது பற்றி கவலைப்பட வேண்டாம், கடனை அடைத்து விடுவோம் என கூறியுள்ளார். அதன்பின் அவர் எந்த கேள்விகளுக்கும் பதில் அளிக்கவில்லை.

இதையடுத்து எச்பிஎஸ் நிறுவன அதிகாரிகள் கடந்த ஜூலை மாதம் பிரம்பட் நிறுவனங்களுக்கு சென்றபோது அவை மூடப்பட்டு இருந்தன. கடந்த 2 ஆண்டுகளாக பிரம்பட் நிறுவனங்கள் அளித்த வாடிக்கையாளரின் இமெயில்கள், வாடிக்கையாளர்கள் பிரம்பட் நிறுவனத்துடன் செய்த ஒப்பந்தங்கள் எல்லாம் போலியானவை என கண்டறியப்பட்டது.

கடன் அடமானமாக காட்டிய சொத்துக்கள் எல்லாம் விற்கப்பட்டு இந்தியா மற்றும் மொரிசீயஸில் உள்ள வங்கி கணக்குகளுக்கு மாற்றப்பட்டு விட்டன. கடந்த ஆகஸ்ட் மாதம் பிரம்பட்டின் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் திவால் ஆனதாக அறிவிக்கப்பட்டன. 500 மில்லியன் டாலருக்கு மேல் கடன் பெற்று மோசடி செய்த பாங்கிம் பிரம்பட் தற்போது இந்தியாவில் இருப்பதாக நம்பப்படுகிறது.

# திமுக ஆட்சி முடிவதற்கான 'கவுன்ட் டவுன்' தொடங்கிவிட்டது நயினார் நாகேந்திரன் கருத்து

தஞ்சாவூர், நவ.03-

தமிழகத்தில் திமுக ஆட்சி முடிவதற்கான 'கவுன்ட் டவுன்' தொடங்கிவிட்டது என பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார்.



ராஜராஜ சோழனின் 1040வது சதய விழாவை முன்னிட்டு, தஞ்சாவூரில் நேற்று அவரது சிலைக்கு பாஜக சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய நயினார் நாகேந்திரன், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: பெரிய கோயிலுக்கு வெளியே உள்ள ராஜராஜ சோழன் சிலையை கோயிலுக்கு உள்ளே வைப்பது குறித்து தலைவர்களிடம் ஆலோசித்து, அதனடிப்படையில் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்வோம்.

நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைகள் தேக்கமடைந்துள்ளன. நெல்மணிகள் முளைத்து வீணாகி வருகின்றன. விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஆனால், இதுகுறித்து கவலைப்படாமல் முதல் வரும், துணை முதல் வரும் சினிமா பார்த்துக் கொண்டிருக்கின்றனர். திமுக ஆட்சி முடிய இன்னும் 140 நாட்கள்தான் உள்ளன. இதற்கான கவுன்ட் டவுன் தொடங்கிவிட்டது. வரும் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி கண்டிப்பாக வெற்றிபெறும். இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக, கும்பகோணத்தில் செய்தியாளர்களிடம் நயினார் நாகேந்திரன் கூறியதாவது: கும்பகோணத்தில் ஏராளமான கோயில் கோபுரங்கள் சேதமடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ளன. அவற்றை சரிசெய்வது குறித்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு சிந்திக்க வேண்டும். அதை விட்டுவிட்டு மாற்றுக் கட்சியின் பிரச்சினை குறித்து அவர் பேச வேண்டிய அவசியம் இல்லை. மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறினார்.

# மீனவர்களுடன் இணைந்து குளத்தில் இறங்கி மீன் பிடித்தார் ராகுல் காந்தி: பிஹாரில் சுவாரஸ்யம்

பாட்னா, நவ.03-

பிஹார் தேர்தல் பிரச்சாரத்துக்கு இடையில், பெகுசராய் பகுதியில் ராகுல் காந்தி இன்று உள்ளூர் மக்களுடன் இணைந்து ஒரு குளத்தில் இறங்கி மீன்பிடித்தார்.



பிஹாரின் பெகுசராய் என்ற இடத்தில் விஜபி கட்சியின் தலைவரும், துணை முதல்வர் வேட்பாளருமான முகேஷ் சாஹ்னியுடன் இணைந்து ஒரு குளத்தின் நடுப்பகுதிக்கு படகு மூலமாக சென்றார் ராகுல் காந்தி. தனது அடையாளமான வெள்ளை டிசர்ட் மற்றும் கருப்பு பேண்ட் அணிந்திருந்த அவர், குளத்தில் நீந்தியபடி மீனவர்களுடன் சேர்ந்து உற்சாகமாக போஸ் கொடுத்தார்.

சம்பவ இடத்தில் ஏராளமான மீனவர்களும் இருந்தனர், அவர்களில் சிலர் இடுப்பு வரை தண்ணீரில் மூழ்கி ராகுல் காந்தியுடன் உரையாடினர்.

இதுகுறித்து ராகுல் காந்தி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'பிஹார் மாநிலம் பெகுசராயில் உள்ள மீனவர் சமூகத்தினரை விஜபி கட்சித் தலைவர் முகேஷ் சாஹ்னியுடன் இன்று சந்தித்தது மகிழ்ச்சியாக இருந்தது.

அவர்களின் பணி எவ்வளவு சுவாரஸ்யமாக இருந்தாலும், அவர்களின் சவால்களும் போராட்டங்களும் கடினமானவை. இருப்பினும், அவர்களின் கடின உழைப்பு, ஆர்வம் மற்றும் ஆழமான புரிதல் எல்லா சூழ்நிலைகளிலும் ஊக்கமளிக்கின்றன.

பிஹாரின் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் குளங்கள் மற்றும் அவற்றில் வாழும் மீனவர்கள், மாநிலத்தின் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய பகுதியாகும். மீனவர்களின் உரிமைகள் மற்றும் மரியாதையை உறுதி செய்வதற்கான ஒவ்வொரு அடியிலும் நான் அவர்களுடன் நிற்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சி வெளியிட்ட எக்ஸ் பதிவில், "மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, பெகுசராயில் மீன்பிடிக்கும் போது, சக மீனவர்களுடன் பேசினார், அவர்களின் பணியுடன் தொடர்புடைய சவால்கள் மற்றும் போராட்டங்களைப் பற்றி விவாதித்தார். விஜபி கட்சியின் தலைவர் முகேஷ் சஹானியும் இந்த சமயத்தில் உடனிருந்தார்.

பிஹார் தேர்தலில் மகா கூட்டணி வாக்குறுதிகள்:

›› மீனவர்களுக்கு பணியில்லாத காலத்தில் ஒரு குடும்பத்திற்கு ரூ.5,000 உதவி பெறுவார்கள்.

›› மீன்வள காப்பீட்டுத் திட்டம் மற்றும் சந்தை வசதிகள் உறுதி செய்யப்படும். ஒவ்வொரு தொகுதியிலும் மீன் சந்தைகள், பயிற்சி மையங்கள் மற்றும் மானியத் திட்டங்கள் நிறுவப்படும்.

›› நீர் தேக்கக் கொள்கையின் கீழ் ஆறுகள் மற்றும் குளங்கள் புத்துயிர் பெறப்படும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 'இவன் என் பழைய நண்பன்' சந்திரபாபு நாயுடு பெருமிதம்

அமராவதி, நவ.03-

ஆந்திர மாநில முதல்வரான சந்திரபாபு நாயுடு, சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு (ஒருங்கிணைந்த ஆந்திரா) தனக்கு சொந்தமான அம்பாஸிடர் காரில்தான் (பதிவு எண் AP 09 G 393) பல மாவட்டங்களுக்கு பயணம் செய்தார்.

பாதுகாப்பு காரணங்களுக்காக அந்த காரை அவர் இப்போது பயன்படுத்துவதில்லை. அவருடைய ஹைதராபாத் வீட்டில் உள்ள அந்தக் காரை நன்கு பராமரித்து வந்தனர். தற்போது மாநிலம் இரண்டாக பிரிந்த நிலையில், அமராவதியில் குடியேறினார் சந்திரபாபு நாயுடு.

இந்நிலையில், அந்த அம்பாஸிடர் கார் ஹைதராபாத்தில் இருந்து அமராவதியில் உள்ள சந்திரபாபு நாயுடு வீட்டுக்கு சமீபத்தில் கொண்டுவரப்பட்டது. இந்த கார் அமராவதி வந்ததும், அதனுடன் நின்று புகைப்படம் எடுத்து கொண்டார்.

'இவன் என் பழைய நண்பன், பல ஆண்டுகள் இது என்னுடன் பயணம் செய்துள்ளது. பல நிகழ்வுகளை இது பார்த்துள்ளது. பல கார்கள் வந்தாலும், இது தான் என்னுடைய விருப்பமான நண்பன்' என அந்த காரின் நினவுகளை அவர் நெகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார் சந்திரபாபு நாயுடு.

# ரூ.650 கோடி திரட்டி கொள்ளை: பிரசாந்த் கிஷோர் மீது புகார்



பாட்னா, நவ.03-

பிஹார் சுயேச்சை எம்.பி. ராஜேஷ் ரஞ்சன் என்கிற பப்பு யாதவ், தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

தேர்தல் வியூகம் வகுக்க மாநிலத்துக்கு மாநிலம் ஓடியவர் பிரசாந்த் கிஷோர். அவர் பிஹார் வந்து முதல்வர் நிதிஷ் குமாரை வளர்ப்புத் தந்தை என்று அழைத்து இங்கேயே தங்குவதாக கூறினார். பிறகு ஜெகன்மோகன், மம்தாவிடம் ஓடினார்.

கன்சல்டன்சி சேவை மூலம் தனக்கு பணம் வருவதாக பிரசாந்த் கிஷோர் கூறுகிறார். ஆனால் அவர் கூறும் நிறுவனத்தின் நிதி அறிக்கையில் இவருக்கு வழங்கப்பட்ட தொகை பற்றிய விவரம் இல்லை. அப்படியெனில் இவருக்கு பணம் கொடுத்தது யார்? பிஹார் தேர்தலுக்காக பிரசாந்த் கிஷோர் ரூ.650 கோடி திரட்டியுள்ளார். இதன் மூலம் பிஹாரை கொள்ளையடித்துள்ளார். இவ்வாறு பப்பு யாதவ் கூறினார்.

# மக்களாட்சியின் அடித்தளமே வாக்கு வங்கிதான்: கமல்ஹாசன் பேச்சு



சென்னை, நவ.03-

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் ஏன் இவ்வளவு அவசரமாக நடைபெறுகிறது என்று கமல்ஹாசன் கேள்வி கேட்டுள்ளார். மக்களாட்சியின் அடித்தளமே வாக்கு வங்கிதான். தகுதியுள்ள ஒரு நபரின் பெயர்கூட வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படக் கூடாது. அவசரமான எஸ்.ஐ.ஆரால் தான் பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டு வாக்களிக்கும் உரிமை பறிக்கப்பட்டது

# கண்ணகி நகரில் உள்ளரங்க கபடி மைதானம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு

சென்னை, நவ.03-

சென்னை கண்ணகி நகரில் உருவாகி வரும் உள்ளரங்க கபடி மைதானத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று ஆய்வு செய்தார்.

பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் கபடி விளையாட்டில் தங்கம் வென்ற இந்திய மகளிர் அணியில் இடம்பெற்று, வெற்றிக்கு முக்கிய பங்காற்றிய கண்ணகி நகர் கார்த்திகாவுக்கு வாழ்த்துகளும், பரிசுகளும் குவிந்த வண்ணம் உள்ளன.

இதற்கிடையே கண்ணகி நகரில் உள்ளரங்க கபடி மைதானம் அமைத்து தரவேண்டும் என கார்த்திகா கோரிக்கை விடுத்திருந்தார். அதை பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் அரசிடம் வலியுறுத்தி இருந்தனர். இதைத் தொடர்ந்து, கண்ணகி நகர் பூங்காவில் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் உள்ளரங்க கபடி மைதானம் அமைக்கும் பணி தற்போது மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இதன் கட்டுமானப் பணிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று ஆய்வு செய்தார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "கபடி வீராங்கனை கார்த்திகாவின் அபார சாதனையால் தமிழகம் முழுவதும் கண்ணகி நகர் புகழ் எதிரொலித்து வருகிறது.

கண்ணகி நகரில் அமைக்கப்பட்டு வரும் உள்ளரங்க கபடி மைதானம், மழை, வெயில் கவலையின்றி கபடி வீரர், வீராங்கனைகள் பயிற்சி பெற உதவியாக இருக்கும். கார்த்திகா போல இன்னும் பல வீராங்கனைகளை உருவாக்கும்" என்று தெரிவித்துள்ளார். இந்த ஆய்வின் போது மாநகராட்சி மேயர் பிரியா, கபடி வீராங்கனை கார்த்திகா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



# சீனாவில் பிரபலமாகி வரும் 'ஹாட்பாட்' குளியல்

பெய்ஜிங், நவ.03-

சீனாவின் ஹெய்லாங்ஜியாங் மாகாணம் ஹார்பின் நகரில் உள்ள ஒரு ரெசார்ட்டில் பாரம்பரிய சீன மருத்துவ முறைப்படி ஹாட்பாட் குளியல் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

5 மீட்டர் விட்டமுள்ள ஒரு வட்ட வடிவ தொட்டியில் வெந்நீர் நிரப்பப்பட்டுள்ளது. அது பார்வையாளர்களைக் கவர்கிறது. ஒரு பிரிவு சிவப்பாகவும், மற்றொரு பிரிவு வெள்ளை நிறத்திலும் உள்ளது அந்த தொட்டியில் சிவப்புப் பக்கம் உள்ள தண்ணீரில் மிளகாய், கத்தரிக்காய், முட்டைக்கோஸ் ஆகியவை நிரப்பப்பட்டுள்ளன. வெள்ளை பக்கம் உள்ள பிரிவில் பால், சிவப்பு பேரீச்சம்பழம், பெர்ரி பழங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இதுபோன்ற சூடான, சூப் போன்ற குளங்களில் பொதுமக்கள் மூழ்கி எழும்போது அவர்களுக்கு புத்துணர்வு கிடைக்கிறது என்று சீனாவிலிருந்து வெளியாகும் சவுத் சைனா மார்னிங் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.தற்போது இதுபோன்ற ஹாட்பாட் குளியலை மேற்கொள்ள சுற்றுலாப் பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்கு கட்டணம் ரூ.2,100.

இதுகுறித்து இந்த ரெசார்ட்டின் ஹாட்பாட் குளியல் பிரிவில் உள்ள ஊழியர் ஒருவர் கூறும் போது, "இந்த ஹாட்பாட் குளியல் தொட்டியில் சிவப்பு நிறத்தில் உள்ள நீர், உண்மையில் ரோஜா இதழ்களில் இருந்து உருவாகிறது. தினமும் புதிய ரோஜா இதழ்களை அதில் கொட்டுவோம். மேலும், இங்கு பயன்படுத்தப்படும் மிளகாய்கள் லேசான காரமுள்ள வகையைச் சேர்ந்தவை. இதில் குளிப்பவர்களின் ரத்த ஓட்டத்தை இந்த மிளகாய்கள் மேம்படுத்துகின்றன. வெள்ளை நிறத் தொட்டியில் உள்ள பால், சருமத்தை ஈரப்பதமாக வைத்திருக்க உதவுகிறது" என்றார்.

# மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நாள்: தமிழகத்தின் உரிமைகளை காக்க போராடுவோம் முதல்வர், கட்சித் தலைவர்கள் உறுதியேற்பு

சென்னை, நவ.03-

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நாளுக்கு வாழ்த்து தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின்மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள், தமிழகத்தின் உரிமைகளை காக்க தமிழகம் போராடுவோம் என உறுதியேற்றனர்.




மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நாளான நவ.1ம் தேதி எல்லை போராட்ட தியாகிகள் நாளாகவும், தமிழ்நாடு நாளாகவும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதையொட்டி முதல்வர், அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ளனர்.

ஆளுநர் ஆர்.என்.ரவி: ஆழ்ந்த ஆன்மிகம், கலாச்சாரம் மற்றும் இலக்கிய பாரம்பரியத்தை கொண்ட தமிழகம் உருவான தினத்தில் தமிழக மக்களுக்கு என மனமார்ந்த வாழ்த்துக்கள். விவசாயிகள், மீனவர்,கைவினைஞர்,நெசவாளர்,தொழில்முனைவோர், விஸ்வகர்மாக்கள் தங்களது திறமைமூலம் தமிழகத்தை புதிய சகாப்|தத்தை நோக்கி எடுத்துச்செல்கின்றனர். தமிழகத்தின் நிலையான வளர்ச்சிக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்.

முதல்வர் மு.க.ஸ்டாலின்: நாம் வாழும் தமிழகத்தின் பல பகுதிகளை நமக்காக போராடிப் பெற்றுத் தந்த மார்ஷல் நேசமணி, ம.பொ.சி போன்ற எண்ணற்ற போராளிகளுக்கு எல்லைப்போராட்டத் தியாகிகள் நாளில் என் வீரவணக்கத்தை செலுத்துகிறேன். போராடாவிட்டால் நமக்கு சொந்தமான நிலம்மட்டுமல்ல, வாக்குரிமையே கூடபறிபோய் விடும் என அப்போதே காட்டிச் சென்றுள்ள நம் தலைவர்கள் வழிகளில் தமிழகத்தின் உரிமைகளை காப்போம். தமிழகம் போராடும். தமிழகம் வெல்லும்.

பாமக நிறுவனர் ராமதாஸ்: இந்நாளை பெருவிழாவாக, திருவிழாவாக கொண்டாடப்பட வேண்டும். தமிழர்கள் இழந்த உரிமைகளை மீட்கவும் உலகத் தமிழர்கள் யாவரும் இந்நாளில் உறுதி ஏற்போம்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ: தமிழர்களின் மொழி, இன, பண்பாட்டு அரசியல் அடையாளங்களை பேணி பாதுகாக்கவும் உரிமைகளை நிலைநாட்டவும் உறுதி ஏற்போம்.

தவெக தலைவர் விஜய்: தமிழ்நாடு எனப் பெயர் சூட்டக் காரணமானவர்களின் தியாகங்களை நினைவுகூர்வோம். மக்கள் விரோதத் திமுகவிடமிருந்து மக்கள் சக்தியின் துணையோடு தமிழகத்தை மீட்போம். இனிய தமிழ்நாடு நாள் நல்வாழ்த்துகள்.

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன்: சாதி, மத,இன வேறுபாடுகளின்றி தமிழர் என்ற உணர்வோடு பாடுபட்டு அனைத்து துறைகளிலும் தமிழகத்தை முன்னோடி மாநிலமாக்க உறுதியேற்போம்.

நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்: மூவேந்தர் கொடிகளுடன் எல்லை மீட்புபோராளிகளுக்கு வணக்கம் செலுத்தி விழாவாக தமிழ்நாடுநாளைக் கொண்டாடுவோம்.

# 15 நாட்களில் பதவி உயர்வு வழங்காவிட்டால் போராட்டம் தொடரும்: காமராசர் பல்கலை. ஆசிரியர்கள் எச்சரிக்கை

மதுரை, நவ.03-

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 3 ஆண்டுகளாக இழுத்தடிக்கப்படும் ஆசிரியர்களுக்கான பதவி உயர்வை 15 நாட்களில் வழங்காவிட்டால் போராட்டம் தொடரும் என,பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் எச்சரித்துள்ளனர்.




மதுரை காமராசர் பல்கலையில் பல்வேறு துறைகள் உள்ளன. இவற்றில் முதலில் உதவிப் பேராசிரியராக பணியில் சேருவோர் 1 முதல் 4 ஆண்டு, 4 5 ஆண்டு, 5 முதல் 12 மற்றும் 15 ஆண்டுகளில் பேராசிரியர் என, தகுதியின் அடிப்படையில் படிப்படியாக பதவி உயர்வு பெறுவர். தற்போது இப்பல்கலைக்கழகத்தில் உதவி, இணை, பேராசிரியர்கள் என 138 பேர் பணிபுரிகின்றனர். இவர்களில் 99 பேர் பதவி உயர்வுக்கான தகுதி பட்டியலை 2022ல் துணைவேந்தர், ஆளுநர் பிரதிநிதி உள்ளிட்ட 9 பேர் குழுவினர் வழங்கிய நிலையில் இன்னும் அவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கவில்லை.

இதன் காரணமாக ஒவ்வொருவரும் சுமார் ரூ. 40 ஆயிரம் சம்பள இழப்புடன் தகுதி குறைந்த பணியிடத்தில் பணிபுரிகின்றனர். பதவி உயர்வு கேட்டு உயர் கல்வித்துறை அமைச்சர், செயலர், கல்லூரி கல்வி ஆணையர் மற்றும் பல்கலை பதிவாளரிடம் தொடர்ந்து வலியுறுத்தியும் நடவடிக்கை இன்றி கடந்த 2 நாட்களுக்கு முன்பு பாதிக்கப்பட்ட 99 ஆண், பெண் ஆசிரியர்களும் பல்கலை வளாகத்தில் தொடர்ந்து உள்ளிருப்பு போராட்டத்தை தொடங்கினர். அவர்களிடம் பதிவாளர் பேச்சுவார்த்தை நடத்தினர். உறுதியான முடிவின்றி போராட்டத்தை தொடர்ந்தனர். இதன்பின் தமிழக கல்லூரி கல்வி ஆணையரும், பல்கலை கன்வீனர் குழு தலைவருமான சுந்தரவல்லியிடம் 15 நாளில் பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்து கடிதம் கொடுத்தால் போராட்டத்தை கைவிட்டு பணிக்கு திரும்புகிறோம் என, காமராசர் பல்கலை பேராசிரியர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் கூறியது; “ஓரியண்டேஷன், புத்தாக்கப்பயிற்சி, பேப்பர் பப்ளிகேஷன், பிஎச்டி வழிகாட்டுதல் போன்ற யுஜிசி விதியின் அடிப்படையில் 99 பேருக்கும் பதவி உயர்வு தேர்வு பட்டியல் தயாரித்தனர். ஆனால் 2022 முதல் தொடர்ந்து முயற்சித்தும் பதவி உயர்வு வழங்கவில்லை. 2017 மற்றும் 2020ல் தயாரித்த பதவி உயர்வுக்கான பட்டியலில் 10க்கும் மேற்பட்டோருக்கு குளறுபடி இருப்பதால் எங்களுக்கான பதவி உயர்வை தொடர்ந்து தாமதிக்கின்றனர்.

யுஜிசி விதியின்படி, எங்களது தேர்வு பட்டியல் முறையாக இருக்கும் நடவடிக்கை எடுக்கவில்லை. பல்கலை கன்வீனர் குழு தலைவரான சுந்தரவல்லி படிப்படியாக பதவி உயர்வு மூலம் ஆணையராக உயர்ந்தவர். அவருக்குகூட எங்களது கஷ்டம் ஏன் புரியவில்லை. பதிவு உயர்வுக்கான சம்பள நிலுவையை கூட தாமதமாக பெறலாம், முதலில் பதவி உயர்வு அளிக்க வேண்டும். 15 நாளில் பதவி உயர்வு அறிவிக்கவில்லை என்றால் போராட்டம் தொடரும்” என்றனர்.

# சென்னை கிண்டியில் 118 ஏக்கரில் மாபெரும் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கும் பணிகள் தொடக்கம்






சென்னை, நவ.03-

சென்னை கிண்டியில் 118 ஏக்கர் பரப்பில் மாபெரும் சுற்றுச்சூழல் பூங்காவில், நீர்நிலைகளின் கரைகள் அமைக்கும் பணி உள்ளிட்ட தோட்டக்கலைப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்து, பார்வையிட்டார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சென்னை, கிண்டியில் 118 ஏக்கர் பரப்பில் மாபெரும் சுற்றுச்சூழல் பூங்காவில், முதற்கட்டமாக நீர்நிலைகளின் கரைகளை சீரமைக்கும் பணிகள், அரியவகை மரங்கள், அழகிய மலர்ச் செடிகள் நடவு செய்தல் மற்றும் நாற்றங்கால் பணிகள் ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

தமிழக அரசுக்கு சொந்தமான சென்னை, கிண்டியில் அமைந்துள்ள நிலத்தில் சுற்றுச்சூழல் பூங்கா மற்றும் அது தொடர்பான பணிகளை அமைப்பதற்காக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் கடந்தாண்டு செப்.20 ம் தேதி வெளியிடப்பட்ட அரசாணையின்படி, தோட்டக் கலை மற்றும் மலைப்பயிர்கள் துறைக்கு 118 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, அப்பகுதியில் மழைநீரை சேகரிக்கும் வகையிலும், சென்னையின் மையப்பகுதியை பெரும் வெள்ளத்திலிருந்து பாதுகாக்கும் வகையிலும் சென்னை மாநகராட்சி மூலம் நான்கு குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தோட்டக்கலைத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்ட சென்னை கிண்டியில் உள்ள இந்நிலத்தில், பல்வேறு இயற்கை சார்ந்த அனுபவத்தினை அளிக்கும் வகையில் உலகத்தரம் வாய்ந்த சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

இப்பூங்கா தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை மூலம் அமைக்கப்பட உள்ள நிலையில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின், பணிகளை தொடங்கி வைத்தார். முன்னதாக, அவ்வளாகத்துக்குள் வந்த முதல்வர் ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரை அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு. தலைமைச்செயலர் நா.முருகானந்தம், மேயர் ஆர்.பிரியா மற்றும் அரசு அதிகாரிகள் வரவேற்றனர்.

தொடர்ந்து, கிண்டி வளாகத்தில் சுற்றுச்சூழல் பூங்கா அமைவது தொடர்பாக, முதல்வருக்கு வேளாண்துறை செயலர் தட்சிணா மூர்த்தி விளக்கினார். இதையடுத்து, சுற்றுச்சூழல் பூங்கா தொடர்பான கல்வெட்டை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்து, அங்கு பல்வேறு நாற்றாங்கால்கள், செடிகள் வைக்கப்பட்டிருந்த இடத்தை அமைச்சர், அதிகாரிகளுடன் சேர்ந்து பார்வையிட்டார். தொடர்ந்து, அந்த வளாகத்தில் மரக்கன்றை முதல்வர், துணை முதல்வர், அமைச்சர்கள் உள்ளிட்டோர் இணைந்து நடவு செய்தனர்.

பின்னர் விழா மேடைக்கு முதல்வர் சென்ற முதல்வர், கிண்டி வளாகத்தில் உள்ள குளங்களின் கரைகளை பலப்படுத்தும் பணிகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதையடுத்து, கிண்டி சுற்றுச்சூழல் பூங்கா தொடர்பான குறும்படம் திரையிடப்பட்டது. அதில், பூங்கா எவ்வாறு அமைய உள்ளது. என்னென்ன வசதிகள் இந்த பூங்காவில் அமைக்கப்படுகிறது என்பது குறித்த விவரங்கள் அதில் இடம் பெற்றிருந்தது.

தொடர்ந்து, குளங்களின் கரைகளை பலப்படுத்தும் பணிகளை முதல்வர் பார்வையிட்டார். இதற்காக அமைக்கப்பட்ட மேடை போன்ற பகுதியில் ஏறி முதல்வர் பார்வையிட்ட போது, மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் பணிகளை விளக்கினார்.

இந்நிகழ்வில், எம்எல்ஏக்கள் கணபதி, பிரபாகரராஜா, அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ் குமார், இந்துஎன்.ராம், தலைமைச்செயலர் நா.முருகானந்தம், வருவாய்த்துறை செயலர் பெ.அமுதா, நில நிர்வாக ஆணையர் கே.எஸ். பழனிசாமி, வேளாண்துறை இயக்குநர் பி.முருகேஷ்., தோட்டக்கலைத்துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

திட்ட அறிக்கை தயாரிப்பு: கிண்டி சுற்றுச்சூழல் பூங்கா உருவாக்கும் திட்டத்துக்கு, ரூ.25 கோடி செலவில் விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை (DFR) உருவாக்க கலந்தாலோசகரை நியமிக்க தோட்டக்கலைத் துறை கடந்த ஜூன் மாதம் டெண்டர் கோரியது. அந்த விரிவான திட்டத்தில், மலர் தோட்டங்கள் அமைத்தல், 3ஞ் காட்சிகள் அமைத்தல், நடைபாதைகள், பிளாஸ்டிக் இல்லாத பசுமை காடுகள், குழந்தைகள் விளையாட்டு பகுதிகள், உள்நாட்டு மரங்களை வளர்த்தல் போன்ற வசதிகள் இடம்பெறுமாறு தயாரிக்க தோட்டக் கலை துறை அறிவுறுத்தி, அதன்பேரில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

# முத்துப்பேட்டை தர்காவில் கந்தூரி விழா சந்தனக்கூடு ஊர்வலம் கோலாகலம்

முத்துப்பேட்டை, நவ.03-

முத்துப்பேட்டை தர்கா கந்தூரி விழாவையொட்டி சந்தனக்கூடு ஊர்வலம் இன்று அதிகாலை நடந்தது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை அடுத்த ஜாம்புவானோடையில் ஹக்கீம் சேக்தாவூது ஆண்டவர் தர்கா உள்ளது. உலக பிரசித்தி பெற்ற இந்த தர்காவுக்கு தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்கள் மற்றும் பல்வேறு நாடுகளில் இருந்து இஸ்லாமியர்கள் தினமும் வந்து செல்கின்றனர். அனைத்து சமுதாயத்தினரும் வந்து செல்லும் மத ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக தர்கா உள்ளது. இந்த தர்காவில் பெரிய கந்தூரி விழா ஒவ்வொரு ஆண்டும் விமரிசையாக நடைபெறும்.

இந்தாண்டு 724வது பெரிய கந்தூரி விழா கடந்த 23ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. இதைத்தொடர்ந்து தினம்தோறும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்து வந்தது. முக்கிய நிகழ்ச்சியான சந்தனக்கூடு ஊர்வலம் நேற்றிரவு நடந்தது. இரவு 10.30 மணிக்கு டிரஸ்டிகள் இல்லத்தில் இருந்து சந்தனங்கள் நிரப்பிய குடங்கள் தர்காவுக்கு எடுத்து செல்லப்பட்டது. நள்ளிரவு 1 மணிக்கு சிறப்பு பிரார்த்தனை நடந்தது. அதிகாலை 2.30 மணிக்கு தர்கா முதன்மை அறங்காவலர் பாக்கர் அலி சாகிப் தலைமையில் டிரஸ்டிகள் புனித சந்தன குடங்களை தலையில் சுமந்து வந்து கண்ணாடிகளால் அலங்கரிக்கப்பட்ட சந்தனக்கூட்டில் வைத்தனர். பின்னர் வாணவேடிக்கை, மேள தாளங்களுடன் சந்தனக்கூடு ஊர்வலம் துவங்கியது.

சேது ரோட்டில் உள்ள அடக்கஸ்தலம் சென்று பின்னர் ஆற்றங்கரை பாவா தர்கா, அம்மா தர்கா பகுதிக்கு சென்று மீண்டும் தர்காவை மூன்று முறை சுற்றி சந்தனக்கூடு ஊர்வலம் வந்தடைந்தது. இஸ்லாமியர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் பூக்களை சந்தனக்கூடு மீது வீசி வழிபாடு நடத்தினர். அதிகாலை 5 மணிக்கு சந்தனக்கூட்டில் இருந்து சந்தன குடங்கள் தர்காவுக்கு எடுத்து வரப்பட்டு ஹக்கீம் ஷேக்தாவூது ஆண்டவர் சமாதிக்கு புனித சந்தனம் பூசும் நிகழ்ச்சி நடந்தது. சந்தனக்கூடு ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.



# சத்தியமங்கலம் அருகே வேனை வழிமறித்து தக்காளியை சாலையில் சிதறவிட்ட யானை

சத்தியமங்கலம், நவ.03-


சத்தியமங்கலம் அருகே சரக்கு வேனை காட்டு யானை வழிமறித்து தும்பிக்கையால் தக்காளி பழங்களை எடுத்து சாலையில் சிதறவிட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பக வனப்பகுதியில் ஏராளமான காட்டு யானைகள் நடமாடுகின்றன. இந்த வனப்பகுதி வழியாக அமைந்துள்ள தமிழக கர்நாடக மாநிலங்களை இணைக்கும் சத்தியமங்கலம் மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் பயணிக்கும் கரும்பு பாரம் ஏற்றிய லாரிகள் மற்றும் காய்கறி பாரம் ஏற்றிச் செல்லும் சரக்கு வாகனங்களை காட்டு யானைகள் அடிக்கடி வழிமறித்து கரும்பு மற்றும் காய்கறிகளை ருசித்து வருகின்றன. இந்நிலையில், நேற்று இரவு கர்நாடக மாநிலம் சாம்ராஜ்நகர் பகுதியில் இருந்து தக்காளி பாரம் ஏற்றிய சரக்கு வேன் சத்தியமங்கலம் மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் ஆசனூர் வனப்பகுதி வழியாக கோவை நோக்கி சென்று கொண்டிருந்தது. அப்போது ஆசனூர் காரப்பள்ளம் சோதனை சாவடி அருகே ஒரு காட்டு யானை இந்த வேனை வழிமறித்தது. யானையை கண்ட ஓட்டுனர் வாகனத்தை நிறுத்தினார்.

இதையடுத்து யானை தனது தும்பிக்கையால் சரக்கு வாகனத்தில் பாரம் ஏற்றப்பட்டுள்ள தக்காளி பெட்டியை எடுத்து சாலையில் தள்ளியதில் ஒரு பெட்டி தக்காளி பழங்கள் முழுவதும் கீழே விழுந்து சாலையில் சிதறியது. பின்னர் தக்காளிகளை ருசித்து சாப்பிட ஆரம்பித்தது. அப்போது சரக்கு வாகன ஓட்டுனர் சமயோசிதமாக செயல் பட்டு வாகனத்தை மெதுவாக நகர்த்தி யானையிடமிருந்து தப்பினார். காட்டு யானை வேனை வழிமறித்து அட்டகாசத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# கரெண்ட் பில் அதிகமாக வந்தா கம்ப்ளைண்ட் பண்ணுங்க... மின்வாரியம் தகவல்

சென்னை, நவ.03-

வீடுகளுக்கு மின்கட்டணம் அதிகமாக வந்தால் அதிகாரிகளிடம் முறையிடலாம் என மின்வாரியம் தெரிவித்துள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் சிலர் தங்கள் வீடுகளில் மின்சார கட்டணம் அதிகரித்து இருப்பதாக கூறிவருகின்றனர். அதேபோல் தமிழ்நாடு முழுவதுமே பலர் தங்களுக்கு செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாத மின் கட்டண விகிதம் கடுமையாக அதிகரித்திருப்பதாக கூறியுள்ளனர்.




100 யூனிட் வரை பயன்படுத்துபவர்களுக்கு கட்டணமே வராது.

அதேபோல் 200 யூனிட் வரை வருபவர்களுக்கும் பெரிய அளவில் கட்டணம் இருக்காது. ஆனால் 300 யூனிட் அல்லது அதற்கு மேல் போகும் போது கணிசமாக கட்டணம் செலுத்த வேண்டியதிருக்கிறது. குறிப்பாக 60 நாட்களுக்கு 400 யூனிட் வரை ரூ.4.95 கட்டணமும், 401 முதல் 500 யூனிட் வரை ரூ.6.65ம், 501 யூனிட் முதல் 600 யூனிட் வரை ரூ.8.80ம், 601 யூனிட் முதல் 800 யூனிட் வரை ரூ.9.95ம், 801 யூனிட் முதல் 1,000 யூனிட் வரை ரூ.11.05ம், 1,000 யூனிட்டுக்கு மேல் ரூ.12.15 கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

சில பகுதிகளில் 60 நாளில் எடுக்க வேண்டிய ரீடிங் 5 நாள் தள்ளி போகும் போது, மின் கட்டணம் கடுமையாக உயர்ந்துவிடுகிறது.

இந்த நிலையில் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்தில் ஒரு சில வீடுகளுக்கு திடீரென அதிகமாக மின்கட்டணம் வந்துள்ளதாக புகார் எழுந்துள்ளன. இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறியதாவது: எந்த வீடுகளுக்கும் கூடுதல் மின் கட்டணம் வந்தால் அதிகாரிகளிடம் முறையிடலாம்.

அதில் தவறு ஏதும் நடந்துள்ளதா என்று அதிகாரிகள் கண்டறிவார்கள். இதில் ஊழியர்களின் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை கடுமையான எடுக்கப்படும். அதேபோல், தமிழ்நாட்டில் 3.46 கோடி மின்நுகர்வோர் உள்ளனர். சில இடங்களில் புகார் வரும்போது தவறு யாரால் ஏற்படுகிறது என்று கண்டறியப்படும். அதை அதிகாரிகள் சரி செய்து கொடுப்பார்கள். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# ஐஐடி, ஐஐஐடி, என்ஐடி மாணவர் சேர்க்கை: ஜெஇஇ தேர்வுக்கு நவ.27க்குள் விண்ணப்பம்

சென்னை, நவ.03-

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ஜெஇஇ மெயின் தேர்வுக்கு நவ.27க்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என தேசிய தேர்வு முகமை (என்டிஏ) அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது: ஐஐடி, ஐஐஐடி, என்ஐடி உள்ளிட்ட உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் பி.இ, பி.டெக் சேர்க்கைக்கான ஜெஇஇ மெயின் தேர்வு தாள் 1ம், பி.ஆர்க், பி.பிளா னிங் சேர்க்கைக்கான ஜெஇஇ மெயின் தேர்வு தாள்2ம் தேசியத் தேர்வு முகமையால் நடத்தப்படுகின்றன. இந்த நுழைவுத்தேர்வு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல் என இரு முறை நடத்தப்படும்.

அந்த வகையில் 2026 2027ம் கல்வி ஆண்டில் மேற்கண்ட படிப்புகளின் சேர்க்கைக்கான முதலாவது ஜெஇஇ மெயின் தேர்வு 2026ம் ஆண்டு ஜனவரி 21 முதல் 30ம் தேதி வரை நடைபெற உள்ளது. ஐஐடி, ஐஐஐடி, என்ஐடி உள்ளிட்ட உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் சேர விரும்பும் பிளஸ் 2 மாணவர்கள் www.nta.ac.in என்ற இணையதளத்தை பயன்படுத்தி நவ.27ம் தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

மாணவர்களுக்கு ஒதுக்கப்படும் தேர்வு மையத்தின் விவரம் ஜனவரி முதல் வாரம் வெளியிடப்படும். இத்தேர்வின் முடிவுகளை பிப்.12ம் தேதி வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் நடைபெறும் 2வது ஜெஇஇ மெயின் தேர்வுக்கான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. ஐஐஐடி, என்ஐடி உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில் சேர ஜெஇஇ மெயின் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். அதேநேரத்தில் ஐஐடியில் சேர வேண்டுமானால் ஜெஇஇ அட்வான்ஸ்டு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். ஜெஇஇ மெயின் தேர்வில் குறிப்பிட்ட தரவரிசைக்குள் இருப்பவர்கள் ஜெஇஇ அட்வான்ஸ்டு தேர்வு எழுதலாம் என்பது குறிப்பிடத்தக்கது.



# கோவை மாவட்டம் காரமடை ஒன்றியம் பெள்ளாதி ஊராட்சியில் உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம்

கோவை, நவ.03-

கோவை மாவட்டம் காரமடை ஒன்றியம் பெள்ளாதி ஊராட்சியில் உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே உள்ள வி.பி.ஆர்.சி அலுவலகத்தில் ஊராட்சி செயலர் வேல் முருகன் தலைமையில் நடைபெற்றது. இதற்கு ஒன்றிய பற்றாளர் கணேசன் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவினங்கள் மற்றும் கடந்த ஆண்டு செய்யப்பட்ட பணிகள் மேலும் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு இலவச கண் சிகிச்சை முகாம் தனியார் மருத்துவமனை மூலம் மேற்கொள்ளப்பட்டது. இம்முகாமில் பரிசோதனை மேற்கொண்ட பின் மேல் சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டவர்கள் முகாம் நாளில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் இந்த முகாமில் பதிவு செய்த அடையாள அட்டையை கொண்டு சென்று இலவசமாக கண் பரிசோதனை செய்து பயன் பெறலாம் என அறிவித்து நடைபெற்றது.




# கோவை மாவட்டம் காரமடை ஒன்றியம் சிக்காரம் பாளையம் ஊராட்சியில் உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம்

கோவை, நவ.03-

கோவை மாவட்டம் காரமடை ஒன்றியம் சிக்காரம் பாளையம் ஊராட்சியில் உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஊராட்சி செயலர் ராஜேஷ் தலைமையில் நடைபெற்றது. இதற்கு ஒன்றிய பற்றாளர் ராமப்பிரியா முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவினங்கள் மற்றும் கடந்த ஆண்டு செய்யப்பட்ட பணிகள் மேலும் நடப்பாண்டில் ரூபாய் ஒரு கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும் இந்த ஊராட்சியில் திறந்தவெளி மலம் கழித்தலற்ற ஊராட்சியாக இருப்பதில் முன் மாதிரியாக திகழ்வதாக கூறி பெருமிதம் கொண்டார்கள். தொடர்ந்து நோய் தடுப்பு, பாலியல் வன்புணர்வு, போதையற்ற சமுதாயம், குடிநீர் சிக்கனம், பெண் குழந்தைகள் பாதுகாப்பு உள்ளிட்ட சமுதாய பாதுகாப்பிற்காக பல்வேறு விழிப்புணர்வுகள் பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்பட்டது.

# கீழக்கரையில் மாநில அளவிலான கராத்தே சாம்பியன்ஷிப் கமுதி மாணவர்கள் தங்கம் வென்ற பெருமை

இராமநாதபுரம், நவ.03-

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் உள்ள அல் பயிய்னா பள்ளியில், தமிழ்நாடு மாநில அளவிலான கராத்தே சாம்பியன்ஷிப் முதல்முறையாக சிறப்பாக நடைபெற்றது. இந்த மாநில போட்டியை கிஸ்வா கராத்தே மற்றும் சிலம்பம் தற்காப்புக்கலை அகாடமி சிறப்பாக ஏற்பாடு செய்தது.



மாநிலம் முழுவதிலிருந்தும் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

நிகழ்வில் தி.மு.க. மாவட்ட செயலாளரும், இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான காதர் பாட்சா முத்துராமலிங்கம், தி.மு.க. அபிராமம் பேரூர் கழக செயலாளர் ஜனாப் ஜாகிர் ஹுசைன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு போட்டிகளைத் தொடங்கி வைத்து மாணவர்களை வாழ்த்தினர்.

பல்வேறு வயது பிரிவுகளில் கட்டா மற்றும் குமிதே எனும் இரு பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன. மாணவர்களின் ஒழுக்கம், உடல் கட்டுப்பாடு மற்றும் தற்காப்புத் திறன்களை வெளிப்படுத்தும் விதமாக போட்டிகள் உற்சாகத்துடன் நடந்தன. இந்த மாநில அளவிலான போட்டியில், கமுதியைச் சேர்ந்த செயிண்ட் ஜேம்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவர்கள் அய்மன் உதுமான் மற்றும் அயசர் உதுமான் ஆகியோர் சிறப்பாக பங்கேற்று, கட்டா மற்றும் குமிதே பிரிவுகளில் தங்களது திறமையால் முதலிடம் பெற்று தங்கப் பதக்கங்கள் வென்றனர்.

இருவரின் சாதனையும் கமுதி மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்ததாக குறிப்பிடப்படுகிறது. பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் ஏற்பாட்டாளர்கள் இருவரின் வெற்றியை பாராட்டினர்.

# சமாஜ்வாதி எம்.பி இக்ரா ஹசன் உ.பி கோயிலுக்கு ரூ.10 லட்சம் அறிவிப்பு

புதுடெல்லி, நவ.03-

மேற்கு உ.பி.யின் ஷாம்லி மாவட்டம், கைரானா தொகுதி சமாஜ்வாதி கட்சியின் எம்.பி.இக்ரா ஹசன். இவரது தொகுதியில் பாபா சமந்தாஸ் என்ற பிரபல கோயில் உள்ளது.

கியான் பிக் ஷு மகாராஜ் என்பவரது நினைவாக இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இங்கு கியான் பிக்ஷு மஹராஜின் 173வது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கலந்து கொண்ட முஸ்லிம் எம்.பி.யான இக்ரா ஹசன், தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கோயில் வளர்ச்சிப் பணிக்கு ரூ.10 லட்சம் ஒதுக்குவதாக அறிவித்தார்.

விழாவில் அவர் பேசுகையில், "பொது நலத்திட்டங்களில் பாஜக அரசு சாதிப் பாகுபாடு காட்டுகிறது. பொது நலப் பணிகளுக்கு தற்போதைய அரசு தடைகளை ஏற்படுத்துகிறது. பொது சேவையை விட சாதி சமன்பாடுகளுக்கு அரசு முன்னுரிமை அளிக்கிறது. பின்தங்கிய சமூகத்தினருக்கு தீங்கு விளைவிக்கிறது" என்றார்.

நாடாளுமன்ற விதிகளின்படி, எம்.பி. ஒருவர் தனது தொகுதி மேம்பாட்டு நிதியை மதம் சார்ந்த பணிகளுக்கு அளிக்க முடியாது. இதனால் இக்ராவின் இந்த அறிவிப்பு சர்ச்சைக்குள்ளாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒருவேளை இதை பாஜக எம்.பி.க்கள் விமர்சித்தால் அதில் அரசியல் லாபம் தேடவே இக்ரா ஹசன் அறிவித்திருப்பதாக கருதப்படுகிறது.

இக்ராவின் சகோதரர் நஹீத் ஹசனும் 3 முறை சமாஜ்வாதி எம்.பி.யாக இருந்தார். இவர் சிறையில் இருந்ததால் இக்ரா முதல்முறையாக தேர்தலில் போட்டியிட்டு எம்.பி.யானார்.

# போடிநாயக்கனூரில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது அருள்மிகு கைலாய கீழ சொக்கநாதர் ஆலயம்

தேனி, நவ.03-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் குரங்கணி செல்லும் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் அமைந்துள்ள பிச்சாங்கரை குளத்தில் வனப்பகுதியில் அமைந்துள்ள இந்த கோவில் சுமார் 1400 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்ததாகவும் பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

முற்றிலும் சிதலமடைந்துள்ள நிலையில் காணப்படும் இக்கோவிலில் ஒவ்வொரு பிரதோஷம் அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் விசேஷ வழிபாடுகள் சிறப்பு பூஜைகள் அலங்காரங்கள் அன்னதானம் நடைபெற்று வருகிறது.



குறிப்பாக தை மாதம் ஆடி மாதம் புரட்டாசி மாதம் அமாவாசைகளில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து இங்கு வந்து சாமி தரிசனம் செய்துவிட்டு செல்வது வழக்கம்.

இதன் தொடக்கப் பணியாக இன்று கருவறையில் வீற்றிருக்கும் கைலாய கீழே சொக்க நாதருக்கு திருவுருவம் அத்திமர பலகையில் வரையப்பட்டு உருஏற்றப்பட்டு சிறப்பு வழிபாடுகள் ஆகம விதிப்படி நடத்தி பாலாலயம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை கீழ் அமைந்துள்ள அருள்மிகு திருக்கோவில் 2-11-2025 அன்று ஞாயிற்றுக்கிழமை 10.30மணிக்கு மேல் 11.30மணிக்குள் கோ பூஜை, இரண்டாம் கால யாகசாலை பூஜை ஆரம்பம் பாலாலயம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து யாத்ரா தானம், மூலவர் சித்தர் படத்திற்கு அபிஷேகம் செய்யப்பட்டு அலங்காரம் செய்யப்பட்டு தீபாரதனை காட்டப்பட்டது. இவ்விழாவில் பக்தர்கள் அனைவருக்கும் கயிலை பிரபு தலைமையில் அன்னதானம் வழங்கப்பட்டது. S.M.பாண்டி சுந்தரபாண்டியன் அறங்காவலர் குழு தலைவர் அருள்மிகு சொக்கநாத சுவாமி திருக்கோவில் தலைமையிலும், அது சமயம் பொதுமக்களும் பக்த கோடிகளும் கலந்துகொண்டு அருள்மிகு கீழச்சொக்கநாத சுவாமி திருவருள் பெற்றுச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து கோவில் கும்பாபிஷேக பணிகள் விரைவில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயிலில் புன்ராவர்த்தன அஷ்பந்தன மஹாகும்பாபிஷேகம் வெகு விமர்சியாக நடைபெற்றது

குன்றத்தூர், நவ.03-

காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிவாக்கத்தில் உலகத்தை காத்தருளக் கூடிய அன்னை பராசக்தி பல அவதாரம் எடுத்து ஆங்காங்கே பல பெயர்களில் அருளுகிறாள். அவ்வகையில் காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் வட்டம் காஞ்சிவாக்கம் கிராமத்தில் பல நெடுங்காலிகை அன்னை ஆதி சக்தி ஸ்ரீ முத்துமாரியம்மன் என்று பெயர் கொண்டு வேண்டு வோருக்கு வேண்டிய வரங்களையும் இஷ்ட தெய்வமாக குல தெய்வமாக கிராம தெய்வமாகவும் இருந்நு அனைத்து வியாதியத்தையும் போக்கி அருளாட்சி செய்து வருகிறார்.அவ்வன்னைக்கு ஆலயம் பாலாயம் செய்யபட்டு கர்ப்ப கிரஹம் செப்பனிடபட்டு புதியதாக விநாயகர் முருகனோடு கூடிய முன் அலங்காரம் மண்டபம் எழுப்பட்டு ஆலயம் வர்ணங்கள் தீட்டபட்டுள்ளது. இந்த திருக்கோவிலில் மஹா கும்பாபிஷேக விழா நேற்று காலை ஸ்ரீ மஹாகணபதி ஹோமத்துடன் துவங்கப்பட்டது. இன்று சிவாகம சிரோமணி குரு மூர்ததி சிவாச்சாரியர் அவர்களால் காலை யாகசாலை பூஜைகள் நிறைவடிந்தது. புனித நீர் அடங்கிய கலசங்கள் மங்கள வாத்தியங்கள் முழுங்க புறம்படாகி கோவிலை வலம்வந்தன. பின்னர் விமானத்தில் புனித நீரூற்றி கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. விழாவிற்க்கான ஏற்பாடுகளை கிராமத்தார்கள், ஆலய விழா குழுவினர்கள் செய்திருந்தார்



# டி.காமராஜ் பிறந்தநாள் முன்னிட்டு நிர்வாகிகள் சார்பில் அறுசுவை உணவு சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது

தாம்பரம், நவ.03-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பெருங்களத்தூர் வடக்கு பகுதி சார்பில் எஸ்.கார்த்திக் மற்றும் எஸ்.விஜய் அவர்கள் ஏற்பாட்டில் மண்டல குழு தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் குட்லைப் சென்டர் இல்லத்தில் அறுசுவை உணவு சிக்கன் பிரியாணி மற்றும் இனிப்புகள் நிர்வாகிகள் கலந்து கொண்டு வழங்கினார்கள்

இந்த நிகழ்ச்சியில் எம்.வினோத், எம்.ரமேஷ், கே.ராஜா, கணபதி, ரவி, வி.திவாகர், பி.வாட்டர் மோகன், இ.நவீன், வினோத், ஆர்.சந்தோஷ், புவனேஷ், மூர்த்தி, சின்ராசு, கணேசன் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு அறுசுவை உணவு சிக்கன் பிரியாணி வழங்கினார்கள்




# குரோம்பேட்டை ரேலா மருத்துவமனையில் பக்கவாதத்திற்கு உடனடி சிக்கிசை வழங்க நடமாடும் சிகிச்சை வாகன சேவையை தொடங்கி வைத்தார் திரைப்பட இயக்குநர் ஐஸ்வர்யா ரஜினிகாந்த்

குரோம்பேட்டை, நவ.03-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை ரேலா மருத்துவமனையில் பக்கவாதத்திற்கு உடனடி சிகிச்சையை வழங்க நடமாடும் சிகிச்சை வாகன சேவை மற்றும் புதிய தொடக்கம் ஆதரவு குழுக்கள் என இரு சேவைகளின் தொடக்க விழா நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக திரைப்பட இயக்குநர் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் கலந்து கொண்டு பக்கவாதத்திற்கு உடனடி சிக்கிசை வழங்க நடமாடும் சிகிச்சை வாகன சேவை மற்றும் புதிய தொடக்கங்கள், அதரவு குழு என இரு சேவைக ளையும் தொடங்கி வைத்தார். தொடக்க விழாவில் நரம்பியம் மற்றும் நரம்பு அறிவியியல் துறையின் மருத்துவ குழு தலைவர் டாக்டர் சங்கர் பாலகிருஷ்ணன், இடையீட்டு நரம்பியல் சிகிச்சை நிபுணர் முரளிதர் ஆகியோர் கலந்து கொண்டு நிஜ நிகழ்வுகளில் இருந்து சுவாரஸ்யமான தகவல்களை பகிரிந்து கொண்டது, பாதிப்பில் இருந்து மீண்டு வரும் நோயாளிகளுக்கு நம்பிக் கையும் உத்வேகத்தை அளிப்பது குறித்து கருத்துரையாற்றினர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த திரைப்பட நடிகர் ஐஸ்வர்யா பேசுகையில் பக்கவாதத்திற்கு உண்டான அறிகுறிகள் தெரிந்த உடனே மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் எனவும் கிடைக்கும் அந்த நேரம் நமக்கு ஒரு பொன்னான நேரம் அதனை நாம் உடனடியாக பயன்படுத்தி நோயாளியை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும் எனவும் மருத்துவர் பேசுகையில் எங்களது வாகனத்தில் அனைத்து வசதிகளும் உள்ளது நோயாளிகளிடம் இருந்து அழைப்பு வந்தவுடன் உடனடியாக சென்று முதலுதவி அளிக்கபடும் மேலும் மருத்துவமனைக்கு வந்தவுடன் அனைத்து பரிசோதனைகள் மேற்கொள்ளபட்டு அதற்கு ஏற்றார்போல் சிகிச்சை அளிக்கபடும் எனவும் பக்கவாதம் நோயின் ஆரம்ப அறிகுறிகள் ஆரம்பத்தில் சிகிச்சை மேற்கொண்டால் நோயாளி எளிதில் குணமடையலாம் அதற்கு மேல் அதிகபடியா பாதிப்பு ஏற்பட்டால் நோயாளி குணமாவதில் காலதாமதம் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக தெரிவித்தார்.

# பாஜகவுடன் கூட்டணி வைத்தது முதல் அதிமுகவுக்கு இறங்குமுகம் தான்: கார்த்தி சிதம்பரம்

மதுரை, நவ.03-

பாஜகவுடன் கூட்டணி வைத்தது முதல் அதிமுகவுக்கு இறங்குமுகம் தான் என்று சிவகங்கை தொகுதி காங்கிரஸ் எம்.பி கார்த்தி சிதம்பரம் கூறியுள்ளார்.



மதுரையில் கட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கார்த்தி சிதம்பரம் கூறியதாவது: "பிரதமர் மோடி தேர்தலை காரணமாக வைத்து மீண்டும் ஒரு பொய்யை சொல்லி இருக்கிறார். பல்வேறு மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு வேலைக்கு வருகின்றனர். அவர்களை வரவேற்கிறோம். அவர்கள் இன்றி இங்கு பல வேலை நடக்காது என, நமக்கு நன்றாகத் தெரியும்.

தமிழகத்தில் அவர்களுக்கு எந்த நெருடலும் இல்லை. இதனாலேயே உத்திரப் பிரதேசம், பிஹார், ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு வேலைக்கு வருகின்றனர். இங்கு அவர்களுக்கு வாழ்வாதாரம் உள்ளது.

இந்தியாவிலேயே தூய்மையற்ற நகரம் பட்டியலில் மதுரை முதலிடம் பெறுவது வேதனை அளிக்கிறது 'ஸ்வச் பாரத்' தூய்மையான நகரங்களில் டாப் 50ல் ஒரு நகரம் கூட தமிழகத்தை சேர்ந்தல்ல. குறிப்பாக பொது இடங்கள் மீது மக்கள் வைத்திருக்கும் மரியாதை என்னை பொருத்தவரை மிக குறைவு. இதில் அரசை தவறு சொல்ல முடியாது.

வாக்காளர் பட்டியலில் சரி பார்ப்பது தவறில்லை. கடந்த தேர்தலில் வாக்களித்தவர்களை நீக்க வேண்டும். எந்த விசாரணையும் இன்றி சிலரை சேர்க்க வேண்டும் என்ற குற்றச்சாட்டும் வருகிறது. யார் பெயரை நீக்கினாலும் அவர்களுக்கு முறையாக நோட்டீஸ் வழங்க வேண்டும். தமிழகத்திற்கு வேலைக்கு என வருவோரை வாக்காளராக மாற்றுவதை ஒரு நாளும் ஏற்க முடியாது.

அதிமுகவில் எல்லா சோதனைகளையும், வெற்றிகளையும் கண்டவர் செங்கோட்டையன். அவரைக் கட்சியில் இருந்து நீக்கியது வேதனை. பாஜகவுடன் கூட்டணி வைத்தது முதல் அதிமுக இறங்கும் முகம்தான் கீழ் நோக்கியே செல்கிறது" என்று கார்த்தி சிதம்பரம் கூறினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161